விடுகிறார்கள். ஆகவே எல்லாத்தரப்பு மாணவர்களுக்கும் நன்மை தருகிற இந்த அரசிடம் அந்த மாணவர்களுக்கும் பஸ் கட்டணத்தைக் குறைக்க செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எச். எம். ராஜு ; தலைவர் அவர்களே, பழங்குடி மாணவர்கள், ஆதி திராவிட மாணவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா, பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இலவச பஸ் திட்டமே இருக்கிறதா என்று கேட்கிறார்கள் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இலவச பஸ் என்று சொன்னாலே இலவசப் பயணம் என்றுதான் பொருள். உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற தரைப் போக்குவரத்துப் பகுதியில் செல்வதைவிட மலைப்பகுதிகளில் ஒரு இடத்திற்குச் செல்கிறபோது சுற்றிச் சுற்றிச் செல்லவேண்டிய காரணத்தால் அதிகமான கிலோ மீட்டர் பயணம் செல்கிற காரணத்தால் குறைந்தபட்சம் நீலகிரி மாவட்டத்திற்குள் மாணவர்கள் பஸ் கட்டணச் சலுகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த யோசனையும் கருத்தில் கொள்ளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

தரங்கம்பாடி துறைமுகம் சீரமைப்பு

3777 திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பூம்புகார் தொகுதியில் உள்ள தரங்கம்பாடி பழைய துறைமுகத்தை மீண்டும் சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு போக்குவரத்து துறைமுகம் அல்லது மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்தப்படுமா ?

1990 மார்ச் 23]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தரங்கம்பாடியில் உள்ள பழைய துறைமுகத்தை சீராக்கும் திட்டம் ஏதும் இத்துறையில் ஆய்வில் இல்லை.

(ஆ) இங்கு மீன்பிடி துறைமுகம் அமைத்திடும் உத்தேசம் ஏதுமில்லை.

9–25 மணி

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழத்தஞ்சை மாவட்டத்திலேயே மீனவர்கள் மிகவும் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி பூம்புகார் தொகுதியாகும். அந்தத் தொகுதி மக்கள் அந்தப் பகுதியிலே மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று மிக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே ஒரு மீன்பிடித் துறைமுகத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்டுக்கொண்டதற்குப் பதில் வந்தவுடன் அடுத்த கேள்வியைக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் சுமார் 240 நாட்டுப் படகுகளின் மூலமாக மட்டுமே மீன் பிடிக்கின்ற தொழில் நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே நாகப்பட்டினம், பழையாறு ஆகிய மீன்பிடித் துறைமுகங்களில் போதுமான வசதிகள் இருப்பதால் அவற்றையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வசதி இருக்கிறது. இரண்டாவதாக கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அனேகமாக எல்லா இடங்களிலுமே மண் சேருகின்ற ஒரு நிலைமை அடிக்கடி இருக்கின்ற காரணத்தால் இந்தப் பகுதிகளில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. ஆகவே எல்லா வசதிகளும் செய்து வைக்கப்பட்டிருக்கக்கூடிய பழையாறு மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அங்கே அந்தத் துறைமுகத்தை ஏற்படுத்தி, ஒரு பெரிய கோட்டையையும் கட்டி இருக்கிறார்கள். அந்தக் கோட்டையும் கடல் அரிப்பால் பாதிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. அந்தத் துறைமுகமும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தக் கோட்டையையாவது பாதுகாக்கக்கூடிய வகையில் தடுப்புச் சுவர்

கட்டப்படுமா? அது அரசின் பொதுப்பணித்துறை மூலமாக எடுத்துக் கொள்ளப்படுமா? அதிலே கட்டிடங்கள் கட்டி வருகிறார்கள். அது நிறுத்தப்படுமா? அது சுற்றுலா மையமாக ஏற்படுத்தப்படுமா? அல்லது அங்கே பயணிகள் விடுதியாவது கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தண்ணீரில்தான் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இருக்கும் என்று எண்ணினேன். வினாக்களில் கூடக் கூட்டு வினாத் திட்டம் இருக்கிறதா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கைகள் அனைத்தும் பரிசீலிக்கப்படும்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் அடிக்கடி மணல் சூழ்ந்து அது பயன்படுத்தப்பட முடியாத அளவுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அதைச் சரி செய்ய வேண்டும். மேலும் நாகப்பட்டினம் துறைமுகம் என்பதே அழிந்து கொண்டிருக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது. அதைப் பாதுகாக்க வேண்டும். மேலும் இப்போது அங்கே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் எல்லாம் வந்து ஏகப்பட்ட தொழில்கள் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அது மைனர் துறைமுகமாக இருப்பதை மாற்றி மேஜர் துறைமுகமாக ஆக்குவதற்கும் அதனைச் செப்பனிட்டுத் தருவதற்கும் மத்திய அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களை வலியுறுத்தவும், மாநில அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கையை எடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் துறைமுகத்தைப் பொறுத்தவரையில் தற்போது மீன் இறங்கு தளமாகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. பழையாறு மீன்பிடித் துறைமுகத்தை ஒட்டி மீன் ஏலம் விடுகிற கூடமும், ஆதாரப் பணிமனையும், பனிக்கட்டி நிலையமும், எரி எண்ணெய் விற்பனை நிலையமும், மீன் உலர் கூடமும், நீர் மற்றும் மின் வசதி ஆகிய உள்ளமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பூம்புகார் மற்றும் வெள்ளப்பள்ளம் ஆகிய இடங்களில் அதாவது இந்த ஒவ்வோர் இடத்திலும் 5 இலட்சம் ரூபாய் செலவில், மத்திய அரசின் 50 சதவீத உதவியோடு உள்ளமைப்பு வசதிகளை ஏற்படுத்த கருத்துரு ஒன்று மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் துறைமுகத்தைப் பொறுத்தவரையில் மீன்பிடிப்பு வசதிக்கு ஏற்றாற்போல் மேலும் சில வசதிகள் செய்யப்பட வேண்டுமா என்பது பற்றி அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 மார்ச் 23]

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப்பேட்டை, தொண்டியக்காடு போன்ற பகுதிகள் இறால் வளர்ப்பதில் முன்னணியில் இருக்கின்றன. அதற்கான பல்லாயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவும் இருக்கிறது. மீன் வளத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அரசுக்கு நல்ல இலாபம் வரக்கூடிய அளவுக்கு இறால் உற்பத்தி இருந்துவருகிறது. எனவே, அந்தப் பகுதியில் அரசு இறால் வளர்ப்புக்காக இடங்களை எடுத்துக் கொள்ளுமா?

9-30 மணி

மாண்புமிகு திரு. மு.கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மீன் வளர்ச்சித் துறைக்கு அனுப்பி வைக்கப்படும்.

கொல்லிமலையில் சந்தன எண்ணெய், சந்தன சோப்பு தொழிற்சாலை

* 5495 திரு. கே. சின்னசாமி:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கொல்லிமலையில் சந்தன எண்ணெய், சந்தன சோப்பு தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு. திரு கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டத்தில் கொல்லிமலையில் சந்தன எண்ணெய், சந்தன சோப்புத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலையில் சந்தன மரங்கள் அதிகமாக இருப்பதால் அங்கு சந்தன எண்ணெய், சந்தன சோப்பு தொழிற்சாலை அமைத்தால் அங்கேயுள்ள மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பும், அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானமும் கிடைக்கும். ஆகவே தொழிற்சாலை அமைக்குமா அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே கொல்லிமலை மட்டுமல்ல, இதுபோன்று 6, 7 மலைப் பகுதிகளிலே சந்தன மரங்கள் அதிகமாக வளர்கின்றன. சந்தன எண்ணெய் ஆலை அமைப்பதன் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்பதிலே கருத்து மாறுபாடுகள் இல்லை. ஆனால் வருவாய் அதிகமாகக் கிட்டுமா என்பதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே இப்போது கொல்லிமலையிலே அப்படிப்பட்ட எண்ணெய் ஆலையை அமைக்கின்ற உத்தேசம் இல்லை.